கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 01

T72 - தமிழ் I **"பகுதி I"** **மூன்று மணித்தியாலம் + 10 நிமிடங்கள்**

அறிவுறுத்தல்கள்.

பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், **பகுதி II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

(பகுதி I)

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ). " இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த **பூங்கொடி முல்லைத்**
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே. "

i. இச் செய்யுளின் பொருளை உமது நடையில் தருக.

ii. தடித்த எழுத்துள்ள செய்யுள் பகுதியின் சிறப்பை விளக்குக.

iii. இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள உயிரளபெடைச் சொல்லைத் தருக.

iv. தலைவியின் துயருக்கான காரணம் யாது?

(ஆ) "பூவிரி பொலன் கழல், பொரு இல் தானையான்,
காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ,
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிட, கங்கை எய்தினான்"

i. இச் செய்யுளில் வெளிப்படும் பரதனின் சிறப்புக்கள் எவை?

ii. இச் செய்யுளில் குறிப்பிடப்படும் நிலைத்திணை, இயங்குதிணைகள் எவை?

iii. தடித்த எழுத்துள்ள செய்யுள் பகுதியின் சிறப்பை விளக்குக.

(12 +12 = 24புள்ளிகள்)

02. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ). கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்

ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்,

ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,

வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.
நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
பாவி மனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?

i. பாரதியார் கண்ட குயிலை மயக்கச் செய்த இசையெலிவகைகள் எவை?
ii. இக் கவிதையில் வெளிப்படும் மூன்றுவித இசை மரபுகளும் எவை?
iii. இக் கவிதையில் கூறப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் எவை?
iv. "நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
பாவி மனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?.." எனும்வரிகள் உணர்த்துவது பற்றி விளக்குக.

அல்லது

(ஆ). தமிழ் வளர்த்த முடிமன்னராகிய சேர, சோழ, பாண்டியருங் கழிந்து போயினர். அகத்தியனாரை முதலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் குழுமியிருந்து தமிழாராய்ந்த முச் சங்கங்களும் அழிந்துபோயின. செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற்றலைகின்ற தன்மைபோலத் தமிழ்மாது பொலிவிழந்து தோன்றுகின்றாள். இவளுக்குத் தொண்டுபுரிய முன்வருவார் யாவருளர்? இப்பூமண்டலத்தில் இப்பொழுது வழங்குகின்ற மொழிகள் தோற்று முன்தோன்றிய தமிழ்மொழியானது இன்றும் நிலைபெற்று நின்று இரண்டுகோடி மக்களுடைய வழக்குமொழியாக விளங்குகின்றது. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றார்கள். வாணிகத்திலும் தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டவர்களாய்த் தென்னாபிரிக்கா, மத்திய அமெரிக்கா, மலாயா, சிங்கப்பூர் முதலிய பிற தேசங்களிலும் பலவகை இயற்கை வனப்பு வாய்ந்த நமது தாய்நாடாகிய இவ்விலங்கைத் தீவிலும், திருவேங்கடந் தென் குமரியெல்லையாகவுடைய பழந்தமிழ் நாட்டிலும் தமிழர் வசித்து வருகின்றனர். இரண்டு கோடி மக்களால் வழங்கப்பட்டு வருகின்ற இம்மொழி உயிருடைய மொழியென்பதை மறுக்கவல்லார் யாவர்? தமிழ் அழிந்துபோகவில்லை; உயிருடனிருக்கிறது. அரசியல் மாற்றங்களினாலும் பிற மொழியாட்சியினாலும் தன்னியல்பிற் குன்றிச் சோர்வினாலயர்ச்சியடைந்த தமிழ்மாது மீண்டும் விழித்தெழுந்துவிட்டாள். அன்னையாகிய தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட்காலங்

கழிந்துவிட்டது. புதிய ஊக்கத்தோடு எழுந்த நம் அன்னையினுடைய அடியிணை மலருக்கு வணக்கஞ் செலுத்துவோமாக.

வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தம கவிகளுக்கு இருப்பதுபோலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத் தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மைகளை மனத்திலெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர்நிலையடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலைமகளுடைய அருளினைப் பெற்ற கவிவாணர் நான்முகத்தேவனைப் போலப் புத்துருவங்களை யாக்க வல்லவர்கள். கலைநூல்களை யோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணதையமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்படுத்துகின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும். செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

i. தமிழ்மாது பொலிவுடன் விளங்கக் காரணமாணவர்கள் யாவர்?

ii. தமிழ் உயிருடன் செழிப்புற்றுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விடயங்கள் எவை?

iii. உத்தம கவிகளிடத்துக் காணப்படும் தனித் திறமை யாது?

iv. இவ் உரை நடைப் பகுதில் வெளிப்படும் ஆசியரின் மொழிநடைச் சிறப்பம்சங்களைத் தருக.

(4 × 4 = 16 புள்ளிகள்)

(பகுதி II)

03. குற்றங்கடிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) குற்றங்களாவன

(ஆ) குற்றம் நீக்கும் முறை

(இ) உலோபத்தின் தீமை

(ஈ) உவமையணிக் குறள்களை விளக்குக

(20 புள்ளிகள்)

04. குகப்படலத்தில், பரதனது படை கங்கைக்கரையை கடந்து வடகரையை அடைந்தது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) யானைகள் கங்கையைக் கடந்தமை

(ஆ) தேர், குதிரைகள் கங்கையைக் கடந்தமை

(இ) மகளீரும், ஆடவரும் கங்கையைக் கடந்தமை

(ஈ) பயன்பட்டுள்ள அணிகள்

(20 புள்ளிகள்)

05. தேர் என்ற **சிறுகதை**யினை அடிப்படையாகக் கொண்டு,

(அ) ஆறுமுகத்தார் என்ற பாத்திரத்தின் இயல்புகள்

(ஆ) குமாரசாமி என்ற பாத்திரத்தின் போக்கு.

(இ) கதைக்கும் தலைப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாடு ஆகிவற்றை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

06. தேம்பாவணி காட்சிப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு,

(அ) வெளிப்படும் இயேசுநாதரின் பெருமை

(அ) இடையர்கள் இயேசுநாதரின் பிறப்பால் அடைந்த இன்பம்

(இ) பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளின் சிறப்பு என்பன பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

07. தமிழ்த் தொண்டு எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு.

(அ) பாரதி பற்றிய சுவாமி விபுலானந்தரின் மனப்பதிவு

(ஆ) உத்தம கவிஞர்கள் பற்றிய சுவாமி விபுலானந்தரின் கருத்துக்கள்

(இ) கட்டுரையில் வெளிப்படும் சுவாமி விபுலானந்தரின் மொழிநடைச் சிறப்பு

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **"கன்றுதன் பயமுலை.."** எனும் குறுந்தொகைச் செய்யுளில் உள்ள அகத்திணை பண்பகளை விளக்குக.

(ஆ) **"மணிமேகலை"** இலக்கியத்தில் மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய காதையில் மாலைக்காட்சி வர்ணிக்கப்படுமாறு

(இ) **"ஒரு வெண் மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது"** எனும் நாவலில் வெளிப்படும் கிராமிய பண்பாட்டம்சங்கள்.

(ஈ) **"பெண் விடுதலை"** எனும் கவிதையில் பாரதி எடுத்துக் கூறும் விடயங்கள்.

(உ) "**காரணமாலையில்"** மக்கமாநகரின் இயற்கை எழில் எடுத்துரைக்கப்படுமாறு

(20 புள்ளிகள்)

அன்பென்று கொட்டு முரசே!